DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No. 34 /2022

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி வாக்குமூலம்

| | |
|---|---|
| Name | பொன்ராஜ் |
| Father's Name | த/பெ கந்தசாமி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2023.

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:-</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர். மனு சம்பந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு கையொப்பங்கள் செய்துள்ளேன். எனது மனுவிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 392/2021, இதச பிரிவுகள் 279, 337 ன் முதல் தகவல் அறிக்கை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ-1 ஆகும். 10.12.2021 தேதியிட்ட மனுதாரரின் விபத்து பதிவேட்டு நகல் உடன் இணைந்த காயச்சான்றிதழ் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் (2 தாள்கள்) ம.சா.ஆ.2 ஆகும். 23.12.2021 தேதியிட்ட மனுதாரரின் டிஸ்சார்ஜ் சம்மரி ஒளிப்பட நகல்

ம.சா.ஆ–3 ஆகும். ( ம.சா.ஆ–3 ன் அசல் தொலைந்துவிட்டது என்று கூறி ஆஜர் செய்யவில்லை). 10.12.2021 தேதியிட்ட CT Scan அறிக்கை அசல் மற்றும் அதன் ஒளிப்பட நகல், 16.12.2021 தேதியிட்ட CT Scan அறிக்கை ஒளிப்பட நகல் ம.சா.ஆ–4 வரிசை (3 தாள்கள்) ஆகும். (16.12.2021ம் தேதியிட்ட CT Scan அறிக்கையின் அசல் தொலைந்துவிட்டது என்று கூறி ஆஜர் செய்யவில்லை). ஸ்கேன் பில்கள் (2 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ.5 வரிசை ஆகும். மனுதாரரின் புறநோயாளி நோட்டு ஒளிப்பட நகல் ம.சா.ஆ–6 ஆகும். ( ம.சா.ஆ–6 அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியிடு செய்யப்படுகிறது). TN69BM0483 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.7 ஆகும். TN69BM0483 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.8 ஆகும். TN69BM0483 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகனத்தின் காப்பீட்டச்சான்றிதழ் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் உடன் அதன் தெளிவான நகல் ம.சா.ஆ.9 ஆகும். மேற்படி குற்ற எண்ணின் குற்ற அறிக்கை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.10 ஆகும். முத்துமுகமது என்பவரின் ஓட்டுநர் உரிமம் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ–11 ஆகும். மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஒளிப்பட நகல் ம.சா.ஆ–12 ஆகும். யூகோ வங்கி, தூத்துக்குடி கிளையில் உள்ள மனுதாரரின் சேமிப்பு கணக்கு எண் 08860110038970ன் பாஸ்புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.13 ஆகும். மனுதாரரின் PAN Card ஒளிப்பட நகல் ம.சா.ஆ–14 ஆகும். ( ம.சா.ஆ.12 முதல் ம.சா.ஆ.14

வரையான ஆவணங்கள் அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியிடு செய்யப்படுகிறது). எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபொழுது எனக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டன என்று விபத்து பதிவேட்டு நகலில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஏனெனில் 2 அல்லது 3 நாட்கள் கழித்துதான் எனக்கு சுயநினைவு வந்தது. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் TN69BM0483 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகனத்தின் பயணம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாகனம் சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் 9.12.2021ம் தேதி இலைக்கட்டுகள் ஏற்றி சென்றோம் என்றால் சரிதான். இலைக்கட்டுகளை இறக்கிவிட்டு அந்த வாகனத்தில் வேலாயுதம் என்பவரின் வீட்டு பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்தோம் என்றால் சரிதான். அப்போது அந்த வாகனத்தின் ஓட்டுநரும், வேலாயுதமும் அந்த வாகனத்தின் முன்புறம் அமர்ந்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் மது அருந்தியிருந்ததால் அந்த வாகனத்தின் பின்புறம் படுத்து பயணம் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த வாகனம் சத்யா ரிசார்ட்ஸ் முன்னால் நின்றுகொண்டிருந்தபோது விபத்து நடந்தது என்றால் சரியல்ல. அந்த வாகனத்தை சத்யா ரிசார்ட்ஸ் முன்னால் நிறுத்திவிட்டு அதன் ஓட்டுநரும், வேலாயுதமும் அருகில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிடுவதற்காக சென்றுவிட்டார்கள் என்றாலும், அப்போது நான் அந்த வாகனத்தில் இருந்து இறங்குவதற்கு முற்படும்பொழுது தூக்க கலக்கத்தினாலும், மது

போதையினாலும் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த வாகனம் சென்றுகொண்டிருக்கும்போது நான் கீழே விழுந்திருந்தால் அதன் ஓட்டுநரும், வேலாயுதமும் என்னை மருத்துவமனையில் சேர்த்திருப்பார்கள் என்றாலும், அந்த வாகனம் சென்றுகொண்டிருக்கும்போது நான் கீழே விழவில்லை என்பதால்தான் அவர்கள் என்னை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அந்த வாகனம் நின்றுகொண்டிருக்கும்பொழுதுதான் கீழே விழுந்தேன் என்றாலும், அந்த வாகனம் சென்றுகொண்டிருக்கும்போது கீழே விழுந்திருந்தால் எனக்கு அதிகப்படியான காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. நான் மாதம் ரூ.18000/– சம்பாதித்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு அரசு மருத்துவமனையில் மட்டும்தான் சிகிச்சை எடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல, தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்து வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் ஓட்டுநருடன் ஒருநபர்தான் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றாலும், அதனால் 3 நபர்கள் பயணம் செய்தது காப்பீட்டுச் சான்றிதழின் விதிமுறைகளுக்கு முரணானது என்றாலும் சரியல்ல. அந்த வாகனத்தின் உரிமையாளர் காப்பீட்டுச் சான்றிதழின் விதிமுறைகளை மீறியுள்ளார் என்றாலும், அதனால் எனக்கு ஏதேனும் இழப்பீடு தொகை கிடைக்க வேண்டும் எனில் அதனை கொடுப்பதற்கு 1 வது எதிர்மனுதாரர்தான் கடமைப்பட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. நான்

பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீட்டுத் தொகைகள் அதிகப்படியானவைகள் என்றாலும், அந்த தொகைகள் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

கற்றறிந்த 1 வது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- R. Selvakumar
**Chief Judicial Magistrate,**
**Thoothukudi.**